கொடுத்த ஆண் சிறுத்தையை அங்கேயே வைத்து, நான் கொடுத்தது என்கிற பலகையைக்கூட எடுத்துவிட்டு இருக்கிறார்கள். இதனால், ஆண் சிறுத்தை தவித்துக் கொண்டு இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : திரு. விநாயகம் அவர்கள் ஒரு ஆண் சிறுத்தை கொடுத்திருப்பது உண்மைதான், நான் கூடப் பார்த்திருக்கிறேன். ஆனால், அதனால் இப்பொழுது நடக்கக்கூட முடியவில்லை. (பலத்த ஆரவாரம்) தீனி வாங்கிக் கொடுக்கக் கூட கனம் அங்கத்தினர் தன் சம்பளத்தில் ஒரு பகுதி கொடுக்க வேண்டும் என்ற நிலையில் இருப்பதைத் தெரிந்து கொண்டு இருப்பார்கள்.

திரு. கே. விநாயகம் : சார், நான் கொடுத்த ஆண் ஒரு வேளை வயதாகியிருக்கலாம். எம். ஜி. ஆர். கொடுத்த பெண் படுத்தே விட்டது, அதற்கு 70 வயதாகிறது. ஆகவே, புதிதாகத் தூண்டுதல் கொடுக்க யோசனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் பதிலுக்கு எம். ஜி. ஆர். சிறுத்தை பற்றிச் சொல்ல வேண்டும் . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதிலே சம்பந்திகளே கூடிப் பேசிக் கொண்டால் (பலத்த ஆரவாரம்) நலமாக இருக்கும்.

அரிசன நலத்துறை உயர்நிலைப் பள்ளிகள்

* 371 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1967-68-ம் கல்வியாண்டில் இம் மாநிலத்தில் ஹரிஜன நல இலாக்காவால் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் எங்கெங்கு திறக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1967-68 கல்வி ஆண்டில் ஹரிஜன இலாகாவால் புதியதாக ஹரிஜனங்களுக்காகத் தனிப்பட்ட உயர்நிலைப்பள்ளி எங்கும் திறக்கப்படவில்லை. ஆனால் கீழ்க்கண்ட மூன்று பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக மாற்ற உத்திரவிடப்பட்டது :—

(1) அரிசன நல இடைப்பள்ளி—வடகரை—செங்கல்பட்டு மாவட்டம்.

(2) அரிசன நல ஆரம்பப்பள்ளி, அஜீஸ்நகர் குடியிருப்பு, ஊமங்கலம் அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, தென் ஆர்க்காடு மாவட்டம்.

(3) அரிசன நல உயர்நிலைப்பள்ளி— ராஜதானி கிராமம், மதுரை மாவட்டம்.

1968 மார்ச் 30]

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகள் திறந்த இடங்களில் எல்லாம் சரியான முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் போடவில்லை, பள்ளிகளுக்குப் போதுமான உபகரணங்கள் இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்பவைகள் எல்லாம் அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? இந்தக் கல்வி ஆண்டிலாவது பள்ளிகள் திறக்கப்படுவதற்குள் பள்ளிகளின் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வி 1967-68-ம் கல்வி ஆண்டில் எத்தனை புதிய பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன என்பதுதான். அங்கங்கே குறைபாடுகள் இருக்கின்றன, சலுகைகளைத் தர வேண்டும் என்ற கேள்வி இல்லை. குறைபாடுகள் இருப்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் அளிக்கப்படும்.

அரசு வழக்குரைஞர் முதலியவர்கள்

*372 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1962 முதல் 1967 வரையில் சர்க்கார் வழக்கறிஞர்கள் Government Pleaders பப்ளிக் பிராஸிகூட்டர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர், மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்க வழக்குரைஞர்களும், அரசாங்கக் குற்ற விசாரணை வழக்குரைஞர்களும் நிலை ஆணைகளின்படி நியமிக்கப்படுகின்றனர். அந்த நிலை ஆணைகளுடன் கீழ்க்கண்டவைகளும் குறிப்பிடப்படுகின்றன. உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டு ஏழு ஆண்டுக் காலத்திற்குக் குறையாது வழக்குரைஞராகப் பணியாற்றியுள்ளவர்களிலிருந்து, ஒவ்வொரு செஷன்ஸ் கோட்டத்திற்கும் அரசாங்க வழக்குரைஞர் ஒருவரும் அரசாங்கக் குற்ற விசாரணை வழக்குரைஞர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும். பணி நீட்டிப்புக் காலம் ஒரு முறைக்கு மூன்று ஆண்டுகள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற பணிமுறை அடிப்படையில் இவர்கள் நியமிக்கப்பட வேண்டும். 1962-லிருந்து 1967 வரையில் நியமிக்கப்பட்ட அரசாங்க வழக்குரைஞர்கள், அரசாங்கக் குற்ற விசாரணை வழக்குரைஞர்கள் குறித்தும் இந்த நிலை ஆணைகளே பின்பற்றப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்த ஸ்டாண்டிங் ஆர்டர்படி அவர்கள் எத்தனை வருடம் சர்வீஸ் செய்தார்கள் என்பதை மட்டும் பார்த்தால் போதுமா? அவர்களுடைய தகுதியையும், திறமையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நியமிக்கப்பட்டால் வழக்குகளே இல்லாதபடி பார்த்துக்